# இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு திட்டம் "
# உங்களது கேள்விகள்? எங்களது விடைகள்!

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" என்றால் என்ன?**

  இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" என்பது இ.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் பயனீட்டாளர்களுக்கு வழங்கப்படவுள்ள நவீன பிளாஸ்டிக் காந்த (magnetic) அடையாள அட்டை ஆகும்.

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" யார் யாருக்கு வழங்கப்படும் ?**

  இ.எஸ்.ஐ காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்திற்கு என தனித்தனியாக இரு "ஸ்மார்ட் கார்டுகள்" வழங்கப்படவுள்ளன.

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டினால் என்னென்ன பயன்கள்?**

  இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" உதவியுடன் காப்பீட்டாளரோ அல்லது குடும்பத்தினரோ தங்குதடையின்றி இ.எஸ்.ஐ மருத்துவ வசதி மற்றும் தத்தமக்குரிய காப்பீட்டு உதவித் தொகைகளையும் எளிதில் பெற்றுக் கொள்ளலாம்.

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"னை நாட்டில் எந்த மூலையிலும் உரியவர் பயன்படுத்தலாம் - உண்மையா?**

  ஆம்! தத்தம் தகுதிக்கேற்ப மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்து காப்பீட்டு வசதிகளையும் காப்பீட்டாளரோ அல்லது குடும்பத்தாரோ இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"-ன் உதவியுடன் இ.எஸ்.ஐ மற்றும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ மனை வாயிலாகவோ அல்லது இ.எஸ்.ஐ அலுவலகங்கள் வாயிலாகவோ பெறலாம். தற்காலிக மற்றும் நிரந்தர "இடம்பெயர்தலால்" காப்பீட்டாளர் கவலை கொள்ள வேண்டியதில்லை, இ.எஸ்.ஐ. கார்டு கைவசம் இருப்பின்!

**வெளியீடு : துணை மண்டல அலுவலகம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், கோவை.**

- **இது எவ்வாறு சாத்தியமாகும் ?**

நாடு முழுவதும் உள்ள இ.எஸ்.ஐ. மருத்துவமனைகள் மற்றும் நிர்வாக அலுவலகங்கள் அனைத்தும் நவீன தகவல் தொழில் நுட்ப உதவியுடன் ஒருங்கிணைக்கப்படவுள்ளது. இந்நிலையில், அனைத்து இ.எஸ்.ஐ. மருத்துவமனைகளிலும் (மருந்தகங்கள் உட்பட) மண்டல/கிளை அலுவலகங்களிலும், கூடவே நிறுவப்படும் கணிணி வசதிகள் வாயிலாக தரமான, தாமதமற்ற சேவை வழங்க ஏதுவாகும்.

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"-ல் பாதுகாப்பு உத்திகள் உள்ளனவா?**

ஆம் ! இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"-ல் அடையாளத்திற்கு காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பப் புகைப்படம் மட்டுமல்லாது, கைவிரல் ரேகைகளும், நவீன தொழில் நுட்ப முறையில் பதிவு செய்யப்படுகின்றன

- **இவற்றால் என்ன பாதுகாப்பு?**

இவற்றால் ஒருவருடைய "ஸ்மார்ட் கார்டை" இன்னொருவர் தெரிந்தோ அல்லது தெரியாமலோ பயன்படுத்தி காப்பீட்டு வசதிகளை தவறாக அனுபவிக்க இயலாது.

- **இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" தொலைந்து விட்டால்...............?**

தொலைந்த கார்டு தவறான நபரிடம் கிடைத்தாலும் அவர் அதனை பயன்படுத்த இயலாது (பாதுகாப்பு உத்திகள்) என்பதால் அச்சமோ, கவலையோ கொள்ள அவசியமில்லை. நிபந்தனைக்குட்பட்டு , தொலைந்த கார்டிற்கு பதிலாக புதிதாக கார்டு வழங்கிட வழிவகைகள் உள்ளன.

- **இத்தகைய சிறப்பு அம்சங்கள் கொண்ட இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"னை பெற என்ன செய்யவேண்டும்?**

முதற்கட்டமாக, இ.எஸ்.ஐ திட்டத்தின் கீழ் தகுதி பெற்ற தொழிலாளி மற்றும் அவரது குடும்பத்தினர் தங்களை உடனடியாக புதிதாக பதிவு செய்துகொள்ள வேண்டும்.

**வெளியீடு : துணை மண்டல அலுவலகம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், கோவை.**

- அவ்வாறு பதிவு செய்வதற்கு வழிமுறைகள் உள்ளனவா?

    ஆம்! இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" குறித்த சிறப்பு படிவம் வடிவமைக்கப்பட்டுள்ளது. தகுதிபெற்ற ஒவ்வொரு தொழிலாளியும் தன்னுடைய மற்றும் குடும்பத்தாருடைய விபரங்கள் உட்பட, கேட்கப்பட்ட அனைத்து விபரங்களையும் படிவத்தில் பூர்த்தி செய்து, தத்தம் தொழிலகம் / நிறுவனம் வாயிலாக சமர்ப்பிக்க வேண்டும்.

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"-ற்கான சிறப்பு படிவத்தை தொழிலாளி எங்கு பெற வேண்டும்?

    தொடர்புடைய தொழிலகங்கள் / நிறுவனங்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அவைகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு"-குறித்த சிறப்பு படிவத்தை தொழிலாளி எப்போது சமர்ப்பிக்க வேண்டும்?

    உடனடியாக தான் சார்ந்த தொழிலகம்/நிறுவனத்தினை அணுகி, ஆவன செய்து கொள்ள வேண்டும்.

- தொழிலாளி அல்லது அவர் சார்ந்த தொழிலகம்/நிறுவனம் சிறப்பு படிவத்தை சமர்ப்பிக்க தவறினால் ......... ?

    பாதிக்கப்பட்ட காப்பீட்டாளருக்கு இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" வழங்குவதில் பின்னர் தாமதமும், சிக்கலும் ஏற்பட வாயப்புகள் உள்ளன.

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டி"ற்கான புகைப்படம் மற்றும் கைவிரல் ரேகை எவ்வாறு பதிவு செய்யப்படும்?

    இதற்கென கோவை, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட நகரங்களில் ஆங்காங்கே, சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். காப்பீட்டாளர் தவறாது தத்தம் (தகுதி பெற்ற) குடும்ப உறுப்பினர்களுடன் முகாமில் கலந்து கொண்டு

புகைப்படம் மற்றும் கைவிரல் ரேகைகளை நவீன தொழில் நுட்ப சாதனங்கள் வாயிலாக பதிவு செய்ய ஒத்துழைக்க வேண்டும்.

- முகாம், இடம், நாள் குறித்த விபரங்கள்............?

  பத்திரிக்கை, ஊடகம், இதர சாதனங்கள் வாயிலாக காலத்தே வெளியிடப்படும்.

- குடும்பம், வெளியூர், அல்லது வெளி மாநிலத்தில் குடியிருக்கும் பட்சத்தில்............?

  காப்பீட்டாளர் தத்தம் செலவில் தவறாது குடும்பத்துடன் முகாமில் கலந்து கொள்ள வேண்டியது அவசியம். குடும்பத்தோடு வராத காப்பீட்டாளரின் புகைப்படம் மற்றும் ரேகை பதிவு செய்யப்படமாட்டாது. (கவனம்)

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" காப்பீட்டாளரது தற்போதைய காப்பீட்டு எண்ணைத்தான் கொண்டிருக்குமா?

  இல்லை! புதிதாக காப்பீட்டு எண் வழங்கப்படலாம். இந்த புதிய எண் தனித்தன்மையுடையதாகவும், நாடு முழுவதும் செல்லுபடியாகக் கூடிய நிரந்தர அடையாள எண்ணாக அமையும்.

- தொழிலகம் / நிறுவனத்தின் குறியீட்டு எண்ணில் (Employer's Code No) மாற்றம் இருக்குமா?

  வருங்காலத்தில் இருக்கும். அறிவுரைகள் விரைவில் வெளியிடப்படும்.

- அவ்வாறு புதிய காப்பீட்டு எண்/குறியீட்டு எண் வழங்கப்படும் வரையில்.........?

  தற்போதைய எண்களே நடைமுறையில் இருக்கும். சமர்ப்பிக்கப்பட வேண்டிய "ஸ்மார்ட் கார்டு" குறித்த தனிப்படிவத்தில் தற்போதைய எண்களையே குறிப்பிட வேண்டும். (கவனம்)

**வெளியீடு : துணை மண்டல அலுவலகம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், கோவை.**

- புதிதாக வேலையில் சேரும் தொழிலாளர்களுக்கு இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" குறித்த தனிப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமா ?

  ஆம்! அதோடு, நடைமுறையில் புகைப்படம், தற்காலிக அடையாள சான்றுப் பகுதியுடன் கூடிய வழக்கமான படிவமும் (Form-1) சமர்ப்பிக்கப் பட வேண்டும். அப்போதுதான் தற்போதைக்கு, நடைமுறையிலுள்ள காகித அடையாள அட்டை வழங்க இயலும்.

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" திட்டத்தினால் தொழிலகங்கள்/நிறுவனங்களுக்கு என்ன பயன்?

  உடனடிப்பயனாக, காப்பீட்டாளர்/குடும்பத்தினர் குறித்த விபரங்கள் சீர்படும் என எதிர்பார்க்கலாம். தொலைநோக்கில், வழங்கப்படவிருக்கிற தரமான இ.எஸ்.ஐ சேவை மனித வள மேம்பாட்டிற்கு வழிவகுக்கும்.

- இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" திட்டம் குறித்து மேலும் எழும் சந்தேகங்களுக்கு.......?
  - ஆர். மோகன் குமார், இணை இயக்குநர் (99524 13954)
  - எம். கார்த்திகேயன், உதவி இயக்குநர் (98431 62890)
  - இ.மெயில் : **dir-kovai@esic.nic.in**
  - இணையதளம் : **www.esicoimbatore.org**

**வெளியீடு : துணை மண்டல அலுவலகம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், கோவை.**

## இ.எஸ்.ஐ "ஸ்மார்ட் கார்டு" - ஓர் ஒப்பீடு

| தற்போதைய அடையாள அட்டை | வருங்கால "ஸ்மார்ட் கார்டு" |
|---|---|
| χ அளவில் அகண்டது (அஞ்சலட்டை போன்று)<br><br>χ காகிதத்தினால் ஆனது.<br><br>χ நவீனம். நுட்பம் ஏதுமில்லை.<br><br>χ புகைப்படம் மட்டுமே (அஞ்சலட்டையளவு) இணைப்பாகக் கொண்டது<br><br>χ நவீன பாதுகாப்பு உத்திகள் இல்லை<br><br>χ குறிப்பிட்ட இ.எஸ்.ஐ நிறுவனத்தில் மட்டுமே பயன்படுத்தக்கூடியது<br><br>χ தவறான நபர் தவறான வழியில் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன.<br><br>χ சேவைக் குறைபாடுகள் இல்லாமலில்லை.<br><br>χ பாதுகாக்க, பராமரிக்க ஏதுவாக இன்றி. பெயரளவில் பயன்பட்டு வரும் சாதாரண அடையாள அட்டை, | ✓ அளவில் அடக்கமானது (கிரெடிட் கார்டு போன்று).<br><br>✓ பிளாஸ்டிக்கினால் ஆனது,<br><br>✓ நவீன தொழில் நுட்பம் கொண்டது.<br><br>✓ காப்பீட்டாளர் புகைப்படம். கைவிரல் ரேகை பதிவுகள் அடங்கியது.<br><br>✓ நவீன பாதுகாப்பு உத்திகள் உண்டு.<br><br>✓ நாட்டில் எந்த இ.எஸ்.ஐ நிறுவனத்திலும் பயன்படுத்தலாம்.<br><br>✓ ஒருவர் கார்டை இன்னொருவர் பயன்படுத்த சாத்தியமில்லை.<br><br>✓ தரமான, தாமதமற்ற சேவை.<br><br>✓ எப்போதும் . யாராலும் விரும்பத்தக்க. போற்றி பாதுகாக்கத்தக்க அரிய அடையாள சாதனம். |

**வெளியீடு : துணை மண்டல அலுவலகம், தொழிலாளர் அரசு காப்பீட்டுக் கழகம், கோவை.**